20.01.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை வாய்ப்பு

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் புதன்கிழமை மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி வரை பதிவான மழை நிலவரத்தில், தமிழகத்தில் தேனி மாவட்டம் பெரியாறு அணை பகுதியில் 10 மி.மீ. மழை பதிவாகியுள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் புதன்கிழமை மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். தொடர்ந்து ஒரு சில நாள்களுக்கு மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் அதிகாலை நேரங்ககளில் மூடுபனி நிலவும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

### தமிழகத்தில் இருந்து மேலும் 4 டிஎம்சி நீர்: கேரளம் ஏற்பு

சோலையாறு, ஆழியாறு ஆகிய இரு அணைகளில் இருந்து தலா 2 டிஎம்சி நீர் வீதம் மொத்தம் 4 டிஎம்சி நீர்தான் வழங்க முடியும் என, தமிழக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தக் கருத்தை கேரள நீர்ப் பாசனத் துறை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டனர். பி.ஏ.பி. பாசனத் திட்டத்தில் தமிழக-கேரள மாநிலங்களின் நதிநீர் பங்கீடு குறித்து இரு மாநில பொதுப் பணித் துறை, நீர்ப் பாசனத் துறை அதிகாரிகளின் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது

பரம்பிக்குளம்-ஆழியாறு (பி.ஏ.பி.) திட்ட ஒப்பந்தப்படி கேரளத்துக்கு ஆண்டுதோறும் தமிழக சோலையாறு அணை மூலமாக கேரள சோலையாறு அணைக்கு 12.30 டி.எம்.சி. நீர், ஆழியாறு அணையில் இருந்து மணக்கடவு அணை வழியாக மூலத்தரா அணைக்கு 7.25 டிஎம்சி நீர் என மொத்தம் 19.55 டிஎம்சி தண்ணீரும், நீர் இருப்பைப் பொருத்து வழங்கப்பட்டு வருகிறது. ஜூலை முதல் ஜூன் மாதம் வரை தண்ணீர் கணக்கிடப்படுகிறது.

இந்த ஆண்டு தற்போது வரை 12.5 டிஎம்சி தண்ணீர் கேரளத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு பி.ஏ.பி., தொகுப்பணை நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் போதிய மழை பெய்யாததால், சோலையாறு, பரம்பிக்குளம் உள்ளிட்ட முக்கிய அணைகள் நிரம்பவில்லை. இதனால், ஒப்பந்தப்படி வழங்க வேண்டிய 19.55 டிஎம்சி தண்ணீரை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், நதிநீர் பங்கீடு குறித்த தமிழக பொதுப் பணித் துறை, கேரள நீர்ப் பாசனத் துறை அதிகாரிகள் பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் பொள்ளாச்சி அருகே நடைபெற்றது. இதில், கோவை பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளர் தமிழரசன், கண்காணிப்புப் பொறியாளர் இளங்கோவன், கேரள நீர்ப் பாசனத் துறை தலைமைப் பொறியாளர் ஹரிஹரநாராயணன் தலைமையில் அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதில், இந்த ஆண்டு தற்போது வரை வழங்கப்பட்டுள்ள 12.5 டிஎம்சியுடன் கூடுதலாக சோலையாறு அணையில் இருந்து 2 டிஎம்சி நீர், ஆழியாறு அணையில் இருந்து 2 டிஎம்சி நீர் என மொத்தம் 4 டிஎம்சிதான் வழங்க முடியும் என தமிழக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்த கருத்தை கேரள நீர்ப் பாசனத் துறை அதிகாரிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

**தாவர எண்ணெய் கலந்து இயக்கப்படும் ரயில் என்ஜின்**



டீசலுடன் தாவர எண்ணெய் கலந்து இயக்கப்படும் பயணிகள் ரயில் என்ஜினை கோட்ட மேலாளர் ஏ.கே. அகர்வால் செவ்வாய்க்கிழமை தொடக்கிவைத்தார்.

திருச்சி பொன்மலையில் உள்ள டீசல் என்ஜின் பணிமனையில் (லோகோ ஷெட்) இருந்து நாள்தோறும் சுமார் 24 ஆயிரம் லிட்டர் டீசல், ரயில் என்ஜின்களுக்கு வழங்கப்படுகிறது. டீசல் செலவை மிச்சப்படுத்தும் வகையிலும், அதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுவைத் தடுக்கும் வகையிலும் தாவர எண்ணெய் பயன்பாட்டை அதிகரிக்குமாறு ரயில்வே வாரியம் அறிவுறுத்தியிருந்தது.

அதன் பேரில், ரயில் என்ஜினுக்குப் பயன்டுத்தும் டீசலில் 95 சதவிகிதம் டீசலுடன் 5 சதவிகித தாவர எண்ணெய் (பயோடீசல்) கலந்து பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதற்காக இந்தியன் எண்ணெய் நிறுவன விநியோக மையத்தில் இருந்து தாவர எண்ணெய்யை குழாய்

மூலம் பொன்மலை பணிமனைக்கு கொண்டு வரவும் ஒப்பந்தம் செய்யப்பட்டு, அதற்கான இணைப்பும், சேமிப்புக்கலனும் (தொட்டி) ஏற்படுத்தப்பட்டது.

இதையடுத்து திருச்சி பொன்மலை ரயில்வே டீசல் என்ஜின் பணிமனையில் தயாரிக்கப்பட்ட, தாவர எண்ணெய் கலந்த டீசலில் இயங்கும் முதல் ரயில் என்ஜினை திருச்சி கோட்ட ரயில்வே மேலாளர் ஏ.கே. அகர்வால் இயக்கி வைத்தார். செவ்வாய்க்கிழமை முதல் திருச்சி கோட்டத்தில் இயங்கும் பயணிகள் ரயில், விரைவு ரயில் உள்ளிட்ட 100-க்கும் மேற்பட்ட ரயில் என்ஜின்களிலும் தாவர எண்ணெய் கலந்த டீசல் பயன்படுத்தப்படும் என்பதுகுறிப்பிடத்தக்கது.

**சிவகங்கை மாவட்டத்தில் சொட்டு நீர்ப் பாசனத்துக்காக ஆதிதிராவிடர், பழங்குடியின விவசாயிகளுக்கு மானியம்**

பிரதமரின் விவசாயத்திற்கான நீர் பாசனத் திட்டத்தின் கீழ் சிவகங்கை மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்யும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சியர் சு.மலர்விழி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: இத்திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன வசதியுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு பயிரின் இடைவெளிக்கு ஏற்றவாறு ஹெக்டேருக்கு அதிகபட்ச மானியமான ரூ. 85,400 வழங்கப்படுகிறது. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 5 ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகிறது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது.

நிகழாண்டில் சிவகங்கை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் விவசாயிகளுக்கு என சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்பு நீர்பாசனம் ஆகியவை அமைக்க மொத்தம் ரூ.46.33 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இதேபோல் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.2.43 லட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. சொட்டு நீர் பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகள் நில ஆவணங்கள், இருப்பிடச் சான்று (குடும்ப அடையாள அட்டை) சாதிச்சான்று, சிறு,குறு விவசாயி எனில் வட்டாட்சியர் சான்று, பாசன ஆதாரத்திற்கான சான்று, மண் மாதிரி மற்றும் பாசன நீர் மாதிரி ஆய்வு முடிவு ஆகிய ஆவணங்களுடன் தங்களது வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகம் மற்றும் சிவகங்கை தோட்டக்கலை துணை இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயனடையலாம் என்றார் அவர்.

**ஜன.29இல் சிவகங்கையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஜன.29ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் அன்றைய தினம் காலை 11.30 மணியளவில் நடைபெறும். இதில், மாவட்டத்தின் அனைத்துத் துறை உயர் அலுவலர்களும் பங்கேற்கின்றனர். விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு குறைகளைத் தெரிவிக்கலாம் என சிவகங்கை மாவட்ட ஆட்சியர் சு. மலர்விழி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயியும் காப்பீடும்!**

பல ஆண்டுகளாக விவசாயிகள் எதிர்பார்த்திருந்த புதிய பயிர்க் காப்பீட்டு திட்டத்தை மத்திய அமைச்சரவை அனுமதித்துள்ளது. அடுத்து வரும் காரீப் பருவம் முதலாக அமலுக்கு வரவிருக்கும் பிரதமர் பயிர்க் காப்பீட்டு திட்டம், ஒரே நாடு, ஒரே காப்பீடு என்பதாக இருக்கும். தற்போது அமலில் உள்ள இருவகையான பயிர்க் காப்பீட்டு திட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு குறைபாடு சுட்டிக் காட்டப்பட்டது. மேலும்,

விவசாயிகளுக்கு உடனடியாக காப்பீடு கிடைப்பதில்லை மற்றும் சந்தா தொகையில் அரசு வழங்கக்கூடிய பங்குக்கு உச்சவரம்பு நிர்ணயிக்கப்படுகிறது என்பதும், சந்தா தொகை அதிகமாக இருக்கிறது என்பதும், கணக்கீடு செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதும்தான் பொதுவாக விவசாயிகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள பிரதமர் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் இந்த குறைபாடுகள் அனைத்தையும் களையெடுத்ததாக அமைந்துள்ளது. குளிர்காலச் சாகுபடியின்போது (ரபி) உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துகளுக்கு சந்தா தொகையில் 1.5% மட்டும் விவசாயி செலுத்தினால் போதும். அதேபோன்று, பருவமழைக்காலச் சாகுபடியின்போது (காரீப்) உணவு தானியங்கள் மற்றும் எண்ணெய் வித்துகளுக்கு 2% சந்தா தொகை செலுத்தினால் போதும். மற்றபடி, கரும்பு, பருத்தி உள்ளிட்ட பணப்பயிர்களுக்கும் தோட்டப்பயிர்களுக்கும் சந்தா தொகையில் 5% செலுத்த வேண்டும். விவசாயிகள் இந்த அளவுக்குத்தான் காப்பீடு செய்ய முடியும் என்றோ, சந்தா தொகை இவ்வளவுதான் வழங்கப்படும் என்றோ எந்த நிபந்தனையும் இல்லாத நிலையில், சாகுபடி செய்யப்படும் மொத்தப் பரப்புக்கும் விவசாயி காப்பீடு செய்வார். குறைந்த அளவே சந்தா தொகை செலுத்துவார். ஆகவே, தற்போது இந்தியாவில் சாகுபடி செய்யப்படும் 19 கோடி ஹெக்டேர் பரப்பளவில், குறைந்தபட்சம் 50 முதல் 60% சாகுபடி பரப்பு இந்த காப்பீட்டு திட்டத்தில் வந்துவிடும் என எதிர்பார்க்கிறார்கள். இதுவரை, சாகுபடி செய்யப்படும் பரப்பில் 25% மட்டுமே காப்பீடு செய்யப்படும் நிலை இருந்து வந்தது. சந்தா தொகையில் அதிகபட்ச அளவு நிர்ணயிக்கப்பட்டிருந்தபோது, விவசாயி தனது பயிர் காப்பீட்டை முழுமையாக பெற முடியாத நிலை இருந்தது. காப்பீட்டின் முழுஅளவைக் காட்டிலும் குறைவான தொகையே விவசாயிக்குக் கிடைத்தது. இதற்குக் காரணம், வேளாண் காப்பீட்டுக்காக அரசு நிர்ணயித்த தொகை அளவு மீறாமல் இருக்கும்படி

பார்த்துக்கொள்ளப்பட்டதுதான். இப்போது அந்த நிலை தவிர்க்கப்பட்டுள்ளது. இந்த சந்தாத் தொகை கூடுதல் செலவை மத்திய,மாநில அரசுகள் இரண்டும் சமவிகிதத்தில் ஏற்றுக்கொள்ளும். பலத்த காற்று, நிலச்சரிவினால் ஏற்படும் பாதிப்புகளும் முந்தைய காப்பீட்டு திட்டத்தில் அடங்கும். தற்போதைய புதிய திட்டத்தில் மழை வெள்ளமும் பயிர்க்காப்பீடு கோருவதற்கு உரியதாக சேர்க்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, அறுவடைக்குப் பிந்தைய சேதங்களைப் பொருத்தவரை, முந்தைய திட்டத்தில் புயல் மழையால் ஏற்பட்ட சேதத்துக்கு மட்டுமே காப்பீடு கோர முடியும். அதுவும், கடலோரப் பகுதியாக இருத்தல் வேண்டும். ஆனால், தற்போது இந்தியா முழுவதிலும் புயல் மழை அல்லது பருவம் தப்பிய மழையால் ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கும் காப்பீடு கோர முடியும் என்பது விவசாயிகளுக்கு மகிழ்ச்சி அளிக்கும். புதிய காப்பீட்டு திட்டத்தில் சேத மதிப்பை அளவிடுவதற்கு நவீன தொழில்நுட்பங்களைக் கையாள வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பயிர்ச் சேதத்தின் தீவிரத் தன்மையை அறிதல், மதிப்பிடுதல் ஆகிய பணிகளில் செயற்கைக்கோள் (தொலைஉணர் கருவிகள் மூலம்) பயன்படுத்தப்படும். சிறுவிமானங்கள் (டிரோன்), நவீன செல்லிடப்பேசி ஆகியன பயன்படுத்தப்படும். இதனால் பயிர்ச்சேதம் உடனடியாக மதிப்பிடப்படுவதோடு, காப்பீட்டுத் தொகையில் 25% உடனடியாக விவசாயிகள் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படவுள்ளது. பயிர்ச்சேதத்தை செல்லிடப்பேசியில் படம் எடுத்துப் பதிவேற்றம்செய்யலாம்.

அதிக ஹெக்டேரில் சாகுபடி செய்யும் பெரிய விவசாயிகளும் எந்தவித கட்டுப்பாடும் இல்லாமல் காப்பீடு பெற இந்தப் புதிய திட்டம் வழிவகுக்கிறது என்று பொதுவாகக் குறை சொல்ல நேரும். மானியம் வழங்குவதில் வேண்டுமானால் பெரிய விவசாயி, சிறு விவசாயி,பயிர்ப் பரப்பளவு எல்லாவற்றையும் வைத்து வரம்புகளை நிர்ணயிக்கலாம். ஆனால், பயிர்ச்சேதம் என்கின்றபோது, யாருடைய நிலம் என்றாலும்

சேதம்சேதம்தானே!

ஒரு மாநிலம் முழுமைக்கும் ஒரேயொரு காப்பீட்டு நிறுவனம்தான் செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், இழப்பீடு கோரல், பெறல் எல்லாமும் அதிக அலைச்சல் இல்லாமல் முடியும் என்பது உறுதி. இப்போது இதில் அதிக ஆர்வம் செலுத்த வேண்டியவர்கள், விழிப்பாக இருக்க வேண்டியவர்கள் விவசாயிகள் மட்டுமே. மழை வெள்ளம், புயல் ஆகியவற்றால் பயிர்ச் சேதமடையும் போது யாருக்கு இழப்பீடு என்பதில் நிலத்தின் உரிமையாளரே சிட்டா புத்தகம் காட்டி நிவாரணம் பெறும் நிலைமையும், குத்தகைக்குப் பயிரிட்ட விவசாயிக்கு ஏதும் கிடைக்காததால் பல இடங்களில் தகராறுக்கும் துயர சம்பவங்களுக்கும் வித்திட்டிருக்கின்றன.

காப்பீடு செய்யும் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் இழப்பீட்டுத் தொகை நேரடியாக சேர்க்கப்படும் என்பதாலும்,காப்பீடு செய்யப்பட்ட பயிருக்கு வங்கிக் கடன் கிடைப்பதும் எளிது என்பதாலும், விவசாயிகள் அனைவரும், தங்கள் அனைத்து வகை பயிர்களையும் காப்பீடு திட்டத்தில் உட்படுத்துவதே பாதுகாப்பானது.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 74.50 அடி**

அணையி அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 605 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் விநாடிக்கு 950 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 12.9 டி.எம்.சி.

**அதிக குளிர்ச்சியான இடங்களில் கறவைமாடுகளை கட்ட வேண்டாம்'**

அதிக குளிர்ச்சியான இடங்களில் கறவை மாடுகளை கட்ட வேண்டாம் என கால்நடை வளர்ப்போருக்கு மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி அறுவுறுத்தினார்.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், கருப்பம்பாளையம் ஊராட்சியில் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், கால்நடைகளுக்கு சிறப்பு மருத்துவக்குழு சிகிச்சை வழங்கி வருவதை செவ்வாய்க்கிழமை பார்வையிட்டப் பிறகு ஆட்சியர் கூறியது:

கரூர் மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், அனைத்து பகுதிகளிலும் சிறப்பு மருத்துவக் குழு நியமித்து, அந்தந்த ஊராட்சிகளில் கால்நடைகளுக்கு தேவையான மருத்துவப் பரிசோதனை செய்து தேவைக்கேற்ப சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தற்போது, குளிர்காலமாக உள்ளதால் காய்ச்சல் போன்ற நோய்த் தாக்குதல் இருந்தாலும், உடனடியாக சிகிச்சை மூலம் சரிசெய்யப்படுகிறது.

மாவட்டத்தில், கால்நடைகளுக்கு கொடிய நோய்த் தாக்குதல் அறிகுறி இல்லை. கால்நடை வளர்ப்போர் தங்கள் பகுதிகளில் நடைபெறும் மருத்துவ முகாமில், மருத்துவர்களிடம் உரிய ஆலோசனை பெற்று கால்நடைகளுக்கு தேவையான மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தேவையற்ற வீண்வதந்திகளை நம்ப வேண்டாம்.

மேலும், கொசுக்கள் தாக்காதவாறு கால்நடைகளை தூய்மையான இடத்தில் கட்ட வேண்டும். அதிக குளிர்ச்சியான இடங்களில் கறவைமாடுகளை கட்ட வேண்டாம். கறவைமாடுகளில் பால்கறக்கும் நபர் ஒவ்வொரு மாட்டிலும் பால்கறந்த பிறகு சோப்பு மூலம் கைகளை நன்றாக சுத்தம்செய்த பிறகே, அடுத்த மாட்டில் பால்கறக்க வேண்டும். கறவைமாடுகள் மூலம் வைரஸ் கிருமிகள் எளிதாக பரவ வாய்ப்புள்ளதால், சுகாதாரத்தை கடைபிடிக்க வேண்டும்.

அதேபோல, மாட்டின் வாய்பகுதி மற்றும் கால்குளம்பு பகுதியில் மாற்றம் தெரிந்தால் உடனடியாக கால்நடை மருத்துவர்களிடம் சென்று உரிய சிகிச்சை அளிக்க வேண்டும். கறவைபசுக்களுக்கு ஊசிபோட்டால் பால் குறைந்துவிடும் என்ற தவறான எண்ணத்தை மாடு வளர்ப்போர் கைவிட்டு, சரியான நேரங்களில் மாடுகளுக்கு தடுப்பூசி போடவேண்டும்

என்றார். தொடர்ந்து, கருப்பம்பாளையம் மற்றும் அப்பிபாளையம் ஊராட்சிப் பகுதிகளில் சிறப்பு கால்நடை மருத்துவக் குழுவினர் சிகிச்சை வழங்கி வருவதை ஆட்சியர் பார்வையிட்டார்.

பிறகு, மாவட்ட விளையாட்டு அரங்கம் அருகே மாலநாயக்கன்பட்டியில் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர்களுக்கான விடுதியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், உணவுப் பொருட்களின் இருப்பு, மாணவர்களின் வருகைப் பதிவேடு, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி போன்றவற்றை ஆட்சியர் ஆய்வு செய்தார். ஆய்வின்போது, கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் பழனிவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## மூலிகை சாகுபடியில் மானியம்



இந்தியாவில் மூலிகையின் தேவை அதிகரிக்கும் அளவு மூலிகை உற்பத்தியானது இல்லை. 90% மேல் கம்பெனிகளின் தேவையானது இயற்கையாக காணப்படும் மூலிகைகளை சேகரித்து அனுப்புவதன் மூலம் நிவர்த்தி செய்யப்படுகிறது. எனவே மூலிகை பயிரிடுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகிறது. ஆகையால் மூலிகைப் பாதுகாப்பு மற்றும் அதன் தேவைகளைக் கருத்தில் கொண்டு தேசிய மூலிகைப் பயிர் வாரியமானது 57 தாவரங்களைப் பயிரிடுவதற்கு மானியம் வழங்கி ஊக்குவிக்கிறது.

இவ்வாரியமானது அழிந்து வரும் அரிதான மூலிகைகளை பயிரிடுவதற்கு 75%ம், உற்பத்தி குறைந்து வரும் நீண்ட காலப் பயிர்களுக்கு 50% மும் மற்ற மூலிகைகளுக்கு 20%ம் மானியம் வழங்குகிறது. மானியத்தை தனி விவசாயியாக அல்லாமல் குழுவாக செயல்பட்டால் பெறுதல் எளிதாகும். தமிழ்நாட்டின் தட்பவெப்ப நிலையில் நன்கு வளரும் மூலிகைகள் மற்றும் அதனை 1 எக்டேரில் சாகுபடி செய்ய மூலிகைப் பயிர் வாரியத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ள மானியத்தைக் காண்போம். வசம்பு- 20%, சோற்றுக்கற்றாழை-20%, பேரரத்தை - 20%, சித்தரத்தை -20%, தண்ணீர்விட்டான் கிழங்கு - 20%, வேம்பு - 20%, நீர் பிரம்மி - 20%, சாரணத்தி - 20%, சென்னா (அ) அவுரி - 20%, நித்திய கல்யாணி - 20%, வல்லாரை -20%, சங்குபுஸ்பம் -20%, மாகாளி - 20%, வாவிலங்கம் -20%, நெல்லி -20%, சிறுகுறிஞ்சான் - 20%, நன்னாரி -20%, கச்சோலம் -20%, பூனைக்காலி -20%, துளசி-20%, கீழாநெல்லி -20%, திப்பிலி -20%, செங்கொடிவேலி-20%, குறுந்தொட்டி-20%, மணத்தக்காளி-20%, சீனித்துளசி-20%, நீர்மருது-20%, தான்றி-20%, கடுக்காய்-20%, சீந்தில் - 20%, நொச்சி-20%, வெட்டிவேர்-20%, அமுக்கிரா-20%, வில்வம்-50%, வாகை-50%, மாவிலங்கம்-50%, கண்வலிக்கிழங்கு- 50%, பாலா-50%, கொடிவேலி -50%, வேங்கை-50%, நஞ்சறுப்பான்-50%, சந்தன வேங்கை - 75%, சந்தனம் - 75% **குறிப்பு:** விவசாயிகள் மேற்கண்ட மூலிகைகளை பயிரிடுவதற்கு தேர்ந்தெடுக்கும் போது கவனத்தில் கொள்ள

வேண்டியவை. 1. சந்தைப்படுத்த வாய்ப்புள்ள மூலிகைகளை மட்டுமே தேர்வு செய்ய வேண்டும். மானியத்தைக் கருத்தில் கொண்டு சாகுபடி செய்யக்கூடாது.சிறந்த மூலிகைக் கம்பெனிகளுடன் ஒப்பந்த சாகுபடியை மேற்கொள்வதுநல்லது.

2. இடவசதி மற்றும் நீர் வசதியைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

3. தரமான விதைகளை தேர்வு செய்வது மிகவும் முக்கியம்.

4. சாகுபடி முறை, அறுவடை முறை, பதப்படுத்தும் முறை மற்றும் செலவினங்களை மூலிகைகளை தேர்வு செய்யும் முன் அறிந்து கொள்வது அவசியமாகும்.

மானியம் பற்றிய விபரங்களை அருகில் உள்ள தோட்டக்கலை அலுவலகத்தை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.

**ந.கணபதிசாமி, மதுரை. 88700 12396**

**நெல்லில் பாக்டீரிய இலைக்கருகல் நோய்**



தற்போது நிலவி வரும் தட்பவெப்பநிலையால் நெற்பயிரில், பாக்டீரிய இலைக்கருகல் நோய் பரவலாக காணப்படுகிறது. நோயின்

ஆரம்பநிலையில், லேசான பச்சை நிறத்தில் நீர்க்கசிவுள்ள அல்லது மஞ்சள் நிறப்புள்ளிகள், இலையின் நுனி மற்றும் விளிம்புகளில் தோன்றுவதால், இலைகள் காய்ந்து விடுகின்றன. நோய் தீவிரமானால், புள்ளிகள் ஒன்றிணைந்து பெரிய வடுக்கள் அல்லது கருகிய திட்டுக்களை, இலைப்பரப்பில் உண்டாக்குகிறது. தூர் கட்டும் மற்றும் கதிர் பிடிக்கும் பருவங்களுக்கு இடையில் நோய் உண்டாகும். நோய் தாக்கினால், இலைகள் மஞ்சள் நிறமாகி பின்னர் கருகியது போலாகும். நோய் முற்றிய நிலையில், அனைத்து இலைகளும் தாக்கப்பட்டு, பயிர் முதிர்வதற்கு முன்பே காய்ந்துவிடும். "சூடோமோனஸ் புளூரசன்ஸ்' என்ற எதிர் உயிர்க்கொல்லி மருந்தைக் கொண்டு, ஈரவிதை நேர்த்தி செய்ய வேண்டும். 60 லிட்டர் தண்ணீரில் 600 கிராம் மருந்தை கலந்து, 60 கிலோ விதையை, ஒருநாள் முழுக்க ஊறவைக்க வேண்டும். அதன் பின், முளைகட்டி நாற்றங்காலில் விதைக்க வேண்டும்.
பரிந்துரைக்கப்படும் தழைச்சத்தை யூரியா மூலம் மூன்று அல்லது நான்கு முறையாக பிரித்து, மேல் உரமாக இடவேண்டும். யூரியா 5 மடங்கு, ஜிப்சம் 4 மடங்கு மற்றும் வேப்பம் புண்ணாக்கு ஒரு மடங்கு விகிதத்தில் கலந்து, ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் மேல் உரமாக இடலாம். விதை நேர்த்தி, நாற்று வேர் நனைத்தல் மற்றும் நட்ட 40, 50வது நாட்களில் இலைவழியாக, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் மருந்து கரைசல் தெளித்தல் முறைகளில், பாக்டீரியா நோய்களைக் கட்டுப்படுத்தலாம்.

**-ம.முத்தமிழன், பயிர் நோயியல் துறைத் தலைவர், பேராசிரியர்கள் ஐ.இயேசுராஜா, ரா.விமலா, ந.ரேவதி, மதுரை விவசாயக் கல்லூரி.**

## சின்ன சின்ன செய்திகள்



**வெனிலா பராமரிப்பு:** காலநிலையைப் பொறுத்து தேவைக்கேற்ப கொடி களுக்கு நீர்பாய்ச்சுவதை தொடர வேண்டும். கொடியின் தூர்பாகத்தில் போதுமான அளவில் மூடாக்கு இட வேண்டும். இதனால் வேர்கள் நன்றாக பரவ ஏதுவாகிறது. வளர்ந்து வரும் வெனிலா கொடியைத் தாங்கு மரத்தில் ஏற்றி விட வேண்டும். பூக்கள் இன்னமும் தோன்றும். தோட்டங்களில் பூக்கள் மலர்ந்த அன்றே காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை மகரந்த சேர்க்கை செய்ய வேண்டும். நத்தை மற்றும் புழுக்களை சேகரித்து அழிக்க வேண்டும். வெனிலாத் தோட்டங்களில் கோழிகள் வருவதைத் தடுக்க வேண்டும். தண்டு நுனி அழுகல் அல்லது பூங்கொத்து அழுகல் நோய் காணப்பட்டால் செடியின் மீது 0.2 சத கார்பன்டாசிம் (100 லிட்டர் தண்ணீரில் 200 கிராம் என்ற அளவில்) தெளிப்பதால் நோய் பரவுவதைத் தடுக்கலாம். நச்சுயிரி நோய் தாக்குதலின் அறிகுறி தென்பட்டதும் அந்தக் கொடியை உடனடியாக அகற்றி அழித்துவிட வேண்டும். *அறுவடை*: காய்கள் அறுவடையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் காய்களின் நுனிப்பகுதியில் வெளிரிய மஞ்சள் நிறம் காணப்படுவது காய்கள் முதிர்ச்சி அடைந்ததற்கு அறிகுறியாகும். அத்தகைய காய்களை உடனடியாக அறுவடை செய்ய வேண்டும். அறுவடை செய்த வெனிலா காய்களை பார்பன் முறையில் பதப்படுத்தலாம். அல்லது அறுவடை செய்தவுடன் பச்சைக் காய்களாக விற்பனை செய்யலாம். **மிளகு பராமரிப்பு:** இளம் செடிகளை தாங்கி, மரத்தின் மீது கட்டி ஏற்றி விட வேண்டும்.

வாடல்நோய் காணப்படும் தோட்டங்களில் பயிர் சுகாதாரத்தை கடைப்பிடிக்க வேண்டும். இதுவரை தோட்டத்தில் மூடாக்கு இடாவிட்டால் உடனே உலர்ந்த இலை தழை மற்றும் களைச் செடிகளைக் கொண்டு செடியில் தூர்ப்பகுதியில் மூடாக்கு இட வேண்டும். இதனால் மண்ணில் ஈரப்பதத்தைப் பாதுகாக்க முடியும். சிற்றிலை மற்றும் பில்லோடி ஆகிய நச்சுயிரி நோய்கள் தாக்கிய செடிகளை அகற்றி அழித்து விட வேண்டும். மெதுவாடல்நோய் அறிகுறி தென்பட்டால் கொடிக்கு ஒரு கிலோ வேப்பம் புண்ணாக்கு இட வேண்டும்.

அறுவடை: அறுவடையைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். மிளகு கொத்தில் ஒன்று அல்லது இரண்டு மிளகு மணிகள் பச்சை நிறத்திலிருந்து ஆரஞ்சு அல்லது சிவப்பு நிறத்திற்கு மாறுவது தான் மிளகு முதிர்ச்சியடைந்ததற்குஅறிகுறியாகும்.

மிளகு கொத்திலிருந்து மிளகு மணிகளை சுகாதாரமான முறையில் கையால் அல்லது மிளகு பிரித்தெடுக்கும் இயந்திரம் மூலம் பிரித்தெடுக்க வேண்டும். மூங்கில், பாய், கான்கிரீட் உலர்களம், பாலிதீன், தார்ப்பாய் போன்ற சுத்தமான மற்றும் சுகாதாரமான பரப்புகளின் மீது மிளகினை உலர்த்த வேண்டும். இதனால் மிளகின் தரத்தினை மேம்படுத்த முடியும்.

**சின்ன வெங்காயத்தில் விதை உற்பத்தி**: கோயம்புத்தூர் த.வே.ப.கழக காய்கறித் துறையின் தலைவர் முனைவர் சரஸ்வதி விவரிக்கிறார். கோ.ஆன்.5 என்ற ரகம் விவசாயிகள் மத்தியில் பிரபலமாக உள்ளது. இந்த ரகத்தில் விதை உற்பத்தி செய்ய முடியும் என்பது கூடுதல் சிறப்பு. ஆராய்ச்சி முடிவின்படி அக்டோபர் - நவம்பர் மாதங்களில் விதைக்கப்படும் சின்ன வெங்காயத்தில் இருந்து மட்டுமே பூக்கள் வந்து விதை உருவாகின்றது. குறிப்பாக கோயம்புத்தூர் சுற்று வட்டாரங்களில் நிலவும் தட்பவெப்ப நிலையில் மட்டுமே பூக்கள் பூத்து விதைகள் உருவாகின்றன. விதை வெங்காயத்தை நாற்றங்கால் விட்டு அதில் 40 நாட்கள் வளர்த்து நடவு செய்ய வேண்டும். இப்படி செய்யும் போது 80 நாட்களில் அறுவடைக்கு வந்து விடும். இந்த முறையில் ஏக்கருக்கு 1

கிலோ விதை போதுமானது. ஆனால் நேரடியாக வெங்காயத்தை விதைக்கும் போது ஏக்கருக்கு 1 டன் வரை விதை தேவைப்படும். ஏக்கருக்கு சுமார் 40 ஆயிரம் ரூபாய் வரை விதைப்புக்காய்களாகவே செலவு பிடிக்கும். ஆனால் விதை வெங்காயத்தின் விலை ஒரு கிலோ ரூ. 4,300 மட்டுமே ஆகும். காய்கறித்துறையில் சின்ன வெங்காயம் விதை விற்பனை செய்கிறார்கள். முன்பதிவு செய்து கொண்டால் விதை உற்பத்தி செய்து வழங்குகிறார்கள். தொடர்புக்கு தொலைபேசி- 0422 - 6611283

**டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## வெள்ளாடு வளர்ப்பு நாளை பயிற்சி

காஞ்சிபுரம் : ஏனாத்தூரில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின், உழவர் பயிற்சி மையத்தில், இலவச வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி, நாளை அளிக்கப்பட உள்ளது.

இதுதொடர்பாக, உழவர் பயிற்சி மைய தலைவர் வீரமணி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:ஏனாத்தூரில், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின், உழவர் பயிற்சி மையம் இயங்கி வருகிறது. இங்கு, கால்நடை மற்றும் கோழி வளர்ப்பு சம்பந்தமான தொழில்நுட்பங்களை, வேலையில்லா இளைஞர்கள்; மகளிர், சிறு தொழில் புரிவோர்; சுயஉதவி குழுவினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.இந்நிலையில், 'வெள்ளாடு வளர்ப்பு' குறித்து, ஒருநாள் இலவச பயிற்சி, ஏனாத்தூரில் உள்ள இம்மையத்தில் நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் பங்கு பெற ஆர்வமுள்ளவர்கள், இன்று, 044 - 2726 4019 என்ற தொலைபேசியில் தொடர்பு கொண்டு, பெயர்களை பதிவு செய்யலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## 2 ஆயிரம் ஹெக்டேரில் இயந்திர நெல் நடவு: வேளாண் இணை இயக்குனர் தகவல்

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 2 ஆயிரம் ஹெக்டேரில், இயந்திர நெல் நடவு செய்யப்பட்டுள்ளதாக, வேளாண் இணை இயக்குனர் கூறினார்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மத்திய, மாநில அரசுகள் சார்பில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ், காவேரிப்பட்டணம் அடுத்த தேவீர அல்லி பகுதியில், நெல் நடவு செய்யும் முறைகளை, மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சபா நடேசன் ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது: இயந்திரத்தின் மூலம் நெல் நடவு செய்யும் போது, ஏக்கருக்கு, 2 ஆயிரம் வீதம் செலவு குறையும். நாற்று நடவு செய்ய ஆட்களை எதிர்பார்க்க தேவையில்லை. இரு தொழிலாளர்கள் இருந்தால் மட்டும் போதும். இயந்திரத்தின் மூலம் சரியான இடைவெளியில் நெல் நடவு செய்வதால், பூச்சி தாக்குதலுக்கு வாய்ப்பில்லை. அத்துடன் கூடுதல் மகசூல் கிடைக்கும். ஆட்கள் பற்றாக்குறையை போக்கவும், கூடுதல் விளைச்சல் கிடைக்கவும், மத்திய, மாநில அரசு இயந்திரத்தின் மூலம் நெல் நடவு செய்ய விவசாயிகளை ஊக்கப்படுத்துகிறது. மேலும், ஒரு ஏக்கருக்கு, 3 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது. நடப்பு ஆண்டு, 30 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையாக பெறப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், இரண்டாம் போக நெல் நடவு செய்யும் முறையில், 19 ஆயிரம் ஹெக்டரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், இயந்திரத்தின் மூலம் நெல் நடவு செய்ய, கடந்த ஆகஸ்ட்

மாதம், 2 ஆயிரம் ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அந்த இலக்கை, ஆறு மாதத்தில் அடைந்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**தென்னைகளை பாதுகாக்க மானிய விலையில் கருவி**

சென்னிமலை: சென்னிமலை வட்டாரத்தில் தென்னை மரங்களை பாதுகாக்க, 50 சதவீத மானிய விலையில் சிவப்பு கூண்டு பொறி வழங்கப்படுகிறது. சென்னிமலை வட்டாரத்தில், 1 லட்சத்து, 77 ஆயிரத்து, 450 தென்னை மரங்கள் உள்ளன. மரங்களை சிவப்பு கூன் வண்டு அதிக அளவில் தாக்கி வருகிறது. இதை கட்டுப்படுத்த வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில், 50 சதவீத மானிய விலையில், சிவப்பு கூண்டு பொறி, 115 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. இப்போது, 750 கூண்டுகள் தயாராக உள்ளது. கூண்டுகள் தேவைப்படும் தென்னை விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம் என, சென்னிமலை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ரெங்கநாயகி தெரிவித்துள்ளார்.

**கரும்பு சாகுபடியில் நுண்ணுயிர் உரம்: மகசூல் அதிகரிக்க புதிய நுட்பங்கள்**

ஈரோடு: "கரும்பு சாகுபடியில், உயிர் உரங்களை பயன்படுத்துவதால், உரச்செலவு குறையும்" என, வேளாண் உதவி இயக்குனர் ஆசைதம்பி தெரிவித்தார்.

மேலும், அவர் கூறியது: உயிர் உரங்கள் மண் வளத்தை மேம்படுத்தி, மண்ணில் நுண்ணுயிர் எண்ணிக்கையை அதிகரித்து, மகசூலை பெருக்கும். கரும்புக்கு, காற்றில் இருக்கும் தழைச்சத்தை கிரகித்து, பயிரில் நிலை நிறுத்தும் நுண்ணுயிர்களில் அசோஸ்பைரில்லம், அசடோபேக்டர் முக்கியமானதாகும். அசோஸ்பைரில்லத்தை கரும்பு கரணையுடன் விதை நேர்த்தி செய்து, நிலத்தில் தொழுஉரம் அல்லது மணலுடன் கலந்து இடலாம். இதன் மூலம் தழைச்சத்து அதிகரித்து, மண் வளம்

பாதுகாக்கப்படும். இரண்டு கிலோ அசோஸ்பைரில்லம் உயிர் உரத்தை, நீரில் கரைத்து, ஒரு ஏக்கருக்கு தேவையான கரணைகளுடன் அதன் மேல், அந்த கலவை நன்கு படும்படி கலந்து நடலாம். 10 கிலோ அசோஸ்பைரில்லத்தை, 20 கிலோ நன்கு மக்கிய குப்பையுடன் கலந்து, ஒரு ஏக்கர் நடவு வயலில் நடுவதற்கு முன், தூவ வேண்டும். அசோஸ்பைரில்லம் உயிர் உரங்களை போலவே, அசடோபேக்டரையும், பாஸ்போ பேக்டீரியாவையும், அதே வழிகளில் கரும்பு மற்றும் பிற பயிர்களுக்கும் பயன்படுத்தலாம்.

## ஜன., 22ல் விவசாய குறைதீர் கூட்டம்

கரூர்: கரூர் மாவட்ட அளவிலான விவசாய குறைதீர் கூட்டம் வரும், 22ம் தேதி நடக்கிறது. மாவட்ட கலெக்டர் ஜெயந்தி வெளியிட்ட அறிக்கை: கரூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும், 22ம் தேதி காலை, 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது. விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## திராட்சையில் உள்ள மருத்துவ குணம்: ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் விளக்கம்

உத்தமபாளையம்,:திராட்சை பழங்களில் உள்ள மருத்துவ குணங்கள், அதன் மேற்பரப்பில்பூச்சி மருந்துகளை கழுவி சாப்பிடுவது குறித்து ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையம் விளக்கமளித்துள்ளது.

அதன் தலைவர் பேராசிரியர் பார்த்திபன் கூறியிருப்பதாவது: இந்தியாவில் திராட்சை சாகுபடி பரப்பில் தமிழகம் நான்காவது

இடத்திலும், உற்பத்தி திறனில் முதலிடத்திலும் உள்ளது. தமிழகத்தை பொறுத்தவரை விதையுள்ள பன்னீர் திராட்சையே 90 சதவீத பரப்பில் சாகுபடி செய்யப்படுகிறது. 2 ஆண்டுகளில் 5 அறுவடை செய்வதால், ஒரு ஏக்கரில் 21 முதல் 23டன் அறுவடை செய்து உற்பத்தியில் முதலிடம் பெறுகின்றனர்.திராட்சையில் விதையுள்ள பன்னீர் திராட்சை உடல் நலத்திற்கு நல்லது. இதயநோய் மற்றும் புற்றுநோய் வராமல் தடுக்கும் ஆற்றல் கொண்டது. விதையுள்ள திராட்சையை சாப்பிடும் போது, விதையை துப்பிவிடாமல் முழுபழத்தையும் விதையுடன் மென்று தின்று விழுங்கிவிட வேண்டும். விதையில் எண்ணற்ற மருத்துவ குணங்கள் உள்ளன. ரத்தத்தில் உள்ள இறந்த செல்களை அப்புறப்படுத்தி புதிய செல்களை உருவாக்க பயன்படும். விதையுள்ள பன்னீர் திராட்சையை சாப்பிடுபவர்களின் வாழ்நாள் அதிகரித்து, இளமையோடு இருக்க உதவுகிறது.

பயிர்பாதுகாப்பிற்காக அடிக்கப்படும் பூச்சி மருந்துகள் மேல்பகுதியில் ஒட்டிக் கொண்டு இருக்கும். எனவே ஒரு லிட்டர் தண்ணீரில் 25 கிராம் சமையல் உப்பில் திராட்சையை போட்டு 15 நிமிடம் ஊற வைக்க வேண்டும். பின்னர் 2 அல்லது 3 முறை சுத்தமான தண்ணீரில் கழுவினால் பழங்களில் மேற்பரப்பில் ஒட்டியிருக்கும் பூச்சி மருந்துள் சுத்தமாகிவிடும்.

இதுதவிர வினிகரிலும் சுத்தம் செய்யலாம். இவ்வாறு சுத்தம் செய்த பழங்களை சிறுவர் முதல் முதியவர்கள் வரை பயமில்லாமல் சாப்பிடலாம். பூச்சி மருந்துகளின் தாக்கம் இருக்காது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**இயந்திர நடவுக்கு ஊக்கம் திருந்திய நெல் சாகுபடிக்கு இல்லை**

உத்தமபாளையம்,:கம்பம் பள்ளத்தாக்கில் இயந்திர நடவுக்கு அளிக்கப்படும் ஊக்கம், திருந்திய நெல் சாகுபடிக்கு வழங்கப்படவில்லை.கடந்த தி.மு.க., ஆட்சியில் நெல் உற்பத்தியை

அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் திருந்திய நெல் சாகுபடி முறை அமல்படுத்தப்பட்டது. அ.தி.மு.க., ஆட்சி பொறுப்பேற்ற பிறகும் இந்த திட்டம் தொடர்ந்தது. இந்த முறையில் விவசாயிகள் நெல் நடவு செய்தால், கூடுதல் மகசூல் கிடைக்கும். ஆனால் நடவிற்கு கூடுதல் தொழிலாளர்கள் தேவைப்படுவர். இடைவெளி விட்டு ஒரே நேர்கோட்டில் நடவு செய்ய வேண்டும். கூடுதல் நேரம் செலவாகும் எனக்கூறி பல விவசாயிகள் இந்த திட்டத்தை விரும்பவில்லை.இருந்த போதும் இந்த திட்டத்தில் ஒரு விவசாயிக்கு ஒரு எக்@டருக்கு ரூ. 3 ஆயிரம் மானியத்தில் ரூ.1, 500 ரொக்கமாகவும், ரூ. 1, 500 உரம் மற்றும் பூச்சி மருந்துகளாகவும் வழங்கப்படும். தேனி மாவட்டத்தில் உள்ள 8 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திற்கும், முதல் போகத்திற்கு சராசரியாக 150 எக்டேருக்கும், இரண்டாம் போகத்தில் 250 எக்டேருக்கும் மானியம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிலையில் இயந்திர நடவு முறையை தற்போது விவசாயத்துறை வலியுறுத்தி வருகிறது. இதனால் திருந்திய நெல் சாகுபடி முறை கைவிடப்

பட்டுள்ளது. மாவட்ட வேளாண் துணை இயக்குநர் நஹீப் கூறுகையில், "திருந்திய நெல் சாகுபடி முறை கைவிடப்படவில்லை. அதில் நடவிற்கு தொழிலாளர்கள் கிடைப்பது சிக்கலாக <உள்ளது. இயந்திர நடவில் அதிக பரப்பில் சாகுபடி செய்யலாம். மேலும் திருந்திய நெல் சாகுபடி முறையை இயந்திர நடவு முறையுடன் இணைத்துள்ளோம். இரண்டு முறைகளும் ஏறக்குறைய ஒன்றுதான். திருந்திய நெல் சாகுபடி முறைக்கு தந்த மானியத்தை இயந்திர நடவிலும் தருகிறோம். தேனி மாவட்டத்தில் ஒரு போகத்திற்கு 800 எக்@டர், இரண்டு போகத்திற்கும் சேர்த்து 1, 600 எக்@டர் பரப்பு இயந்திர நடவிற்கு மானியம் வழங்கப்படுகிறது," என்றார்.

## வேளாண் பல்கலையில் பயிற்சி முகாம்

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டையை சேர்ந்த, 40 விவசாயிகளுக்கு கோயம்புத்தூர் வேளாண் பல்கலைக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. நாமக்கல் மாவட்டம் , நாம கிரிப்பேட்டை ஒன்றியத்தில் விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா), 40 விவசாயிகளுக்கு கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில், மூன்று நாட்கள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. இதில், பயிர் சுழற்சி மற்றும் நன்மை பயக்கும் பூச்சிகள், நுண்ணுயிரிகள் மூலம் நோய் மற்றும் பூச்சிக்கட்டுப்பாடு, வரப்பு ஓரப்பயிர்கள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், ஒட்டுண்ணிகள், பஞ்ச காவ்யா, மண்புழு உரம் தயாரித்தல், ஒளிப்பொறி, ஒட்டும் பொறி, இன கவர்ச்சி பொறி மூலம் நோய் மற்றும் பூச்சிக் கட்டுப்பாடு ஆகியவை குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சர்க்கரை உற்பத்தி அதிகரிப்பு



புதுடெல்லி: நாட்டின் சர்க்கரை உற்பத்தி நடப்பு ஆண்டில் கடந்த 15ம் தேதி வரை 11.09 மில்லியன் டன்களாக உள்ளது. முந்தைய ஆண்டு இதே காலக்கட்டத்தில் இது 10.38 மில்லியன் டன்களாகும். அதாவது, சர்க்கரை உற்பத்தி 7 சதவீதம் அதிகரித்துள்ளது. பருவமழை பொய்த்ததால் கரும்பு விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் மகாராஷ்டிரா உள்ளிட்ட இடங்களில் நடப்பு ஆண்டுக்கான சீசனில் வழக்கத்தை விட முன்கூட்டியே அரவை மேற்கொள்ளப்பட்டது. இதனால் உற்பத்தி அதிகரித்துள்ளது என இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

### முருங்கைக்காய் வரத்து குறைவால் ஒரு கிலோ ரூ.120க்கு விற்பனை

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு முருங்கக்காய் வரத்து குறைவால், ஒருகிலோ ரூ.120வரை விற்பனை செய்யப்படுவதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.பொள்ளாச்சி மர்க்கெட்டுக்கு பல்வேறு

காய்கறிகள் வரத்து இருந்தாலும், முருங்கக்காயானது, பெரும்பாலும் தென்மாவட்ட பகுதியான திசையன்விளை, நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், திண்டுக்கல் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இருந்து விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது. தென்மாவட்ட பகுதியிலிருந்து கொண்டுவரப்படும் முருங்கக்காயின் அளவை பொறுத்து, உள்ளூர் பகுதி வியாபாரிகள் விலை நிர்ணயம் செய்து வாங்கி செல்கின்றனர். கடந்த ஆண்டில் ஆகஸ்ட் முதல் நவம்பர் மாதம் வரை மார்க்கெட்டுக்கு முருங்கக்காய் வரத்து ஓரளவு இருந்தது. வெளி மாவட்டங்களில் இருந்து மட்டுமின்றி உள்ளூர் பகுதியில் குறிப்பிட்ட இடங்களில் விளைச்சல் அதிகமாக இருந்ததால் வரத்து அதிகரித்து, அந்நேரத்தில் ரூ.50 முதல் ரூ.60வரை என குறைவான விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து, வெளியூர்களில் இருந்து முருங்கக்காய் வரத்து மிகவும் குறைவாக உள்ளது.

வெளி மாவட்டங்களில் போதிய விளைச்சல் இல்லாததால், முருங்கை வரத்து குறைந்து அதன் விலை கிடுகிடு என்று உயர்ந்துள்ளது. முருங்கை வரத்து குறைந்ததையடுத்து மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி ஒருகிலோ ரூ.110முதல் ரூ.120வரை என, அதன் தரத்தை பொறுத்து விற்பனை செய்யப்படுகிறது. சில கடைகளில் ஒரு கிலோ ரூ.130வரையிலும் விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறத

## இலவச கறவைமாடு வளர்ப்பு பயிற்சி

திருச்சி, : திருச்சியில் நாளை இலவச கறவை மாடு வளர்ப்பு பயிற்சி நடைபெறுகிறது.திருச்சி கொட்டப்பட்டு கோழி பண்ணை சாலையில் உள்ள கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் நாளை மற்றும் 21ம் தேதிகளில் இலவச கறவைமாடு வளர்ப்பு மற்றும் தீவனப்புல்

சாகுபடி பயிற்சி நடக்கிறது. பயிற்சியில், தரமான கறவை மாடுகளை தேர்ந்தெடுக்கும் முறைகள், முறையான பராமாிப்பு, செயற்கை முறை கருவூட்டல், தீவன மேலாண்மை, கன்று பராமரிப்பு, நோய் தடுப்பு முறை கள், மடிநோய் தடுப்பு முறைகள், தீவனப்புற்கள் சாகுபடி, தீவன மரங்கள் வளர்ப்பு பற்றிய முறைகள், ஆலோசனைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் பற்றி 2நாட்கள் பயிற்சி அளிக்கப் படும். இப்பயிற்சியில் சேர விரும்புவோர் நாளை (20ம் தேதி) காலை 10 மணிக்குள் வரவேண்டும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு 0431-2331715 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம் என திருச்சி கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் ரிச்சர்டுஜெகதீசன் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கரூர், : கரூர் மாவட்ட அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 22ம் தேதி (வெள்ளிகிழமை) காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள், அனைவரும் விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என கலெக்டர் தெரிவித்துள்ளார்.

**பாரம்பரிய செடிகளை அழிக்கும் பார்த்தீனியம் மண்வளமும் பாதிப்பு**

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் மருத்துவ குணம் கொண்ட பாரம்பரிய செடிகளை அழித்து பார்த்தீனிய விஷச்செடி வேகமாக பரவி வருகிறது. சிறிய அளவில் மழை பெய்தாலே சாலையோரங்களில் பச்சை, பசேல் என புதிது, புதிதாக செடிகள் முளைக்கும். தும்பை, குப்பைமேனி, மிளகு தக்காளி, எருக்கம், பச்சை, நித்தியகல்யாணி, அவுரி, ஆவரை,

கோவை, பிரண்டை, மயில், முடக்கத்தான், கீழாநெல்லி, ஆணை நெறிஞ்சி, தாலி இலை, அருகம்புல் என சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட செடிகளுக்கு சாலையோரமே பிறப்பிடமாய் இருக்கிறது.

மருத்துவ குணமும், மண்வளத்தை காக்கும் திறனும் கொண்ட இவ்வகை செடிகள் கிராமமக்களின் நோய்களை மட்டுமின்றி உணவுத்தேவையையும் பூர்த்தி செய்து வந்தது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்வரை கிராமங்கள் மட்டுமின்றி நகரங்களின் சாலையோரங்களில் முளைத்த இவ்வகை செடிகளின் பூக்கள், இலைகள், தண்டுகள், வேர்கள் என அனைத்தும் மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் பயன்பட்டு வந்தது. தற்போது அந்த வகைச் செடிகளைக் காண்பது அரிதாகிவருகிறது.

கால்நடைகளுக்கும் நன்மை அளிக்கும் இவ்வகை செடிகளை புதிதாக பரவி வரும் பார்த்தீனிய செடிகள் அழித்து வருகிறது. பார்த்தீனிய செடிகள் இருக்கும் இடத்தில் இவ்வகை செடிகள் முளைக்காது. பார்த்தீனிய செடிகள் மண்வளத்திற்கும், கால்நடைகளுக்கும் தீங்கானது. இச்செடிகளின் வரவால் வண்ணத்துப்பூச்சி இனமும், பாரம்பரிய மருத்துவகுணம் கொண்ட செடிகளும் படிப்படியாக அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. பார்த்தீனிய செடிகளை முற்றிலுமாக அழித்து மருத்துவ குணம் கொண்ட அரிய வகை செடிகளை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என இயற்கை ஆர்வலர்களும், கிராமத்தினரும் வலியுறுத்தியுள்ளனர்.

## காய்கறி சாகுபடியில் ரசாயன உரத்தை தவிருங்கள் தோட்டக்கலைத் துறை அறிவுரை

ராமநாதபுரம், : காய்கறி சாகுபடியில் ரசாயன உரம், மருந்துகளை தவிர்க்க வேண்டும் என விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து ராமநாதபுரம் மாவட்ட தோட்டக்கலைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ‘‘மாவட்டத்தில் காய்கறி மற்றும் பழப்பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. இவைகளில் ஏற்படும் நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ரசாயன உரம், மருந்துகளை தவிர்த்து இயற்கை வழி உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்த வேண்டும். நன்றாக மக்கிய தொழு உரம், மண்புழு உரம், மண்ணின் பௌதிக குணத்தை மேம்படுத்தி உற்பத்தி தன்மையை அதிகரித்து கொடுக்கும். அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்கள் பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை இயற்கைமுறையிலேயே அளிக்கும். மேலும் ஊட்டமேற்றிய தொழு உரம், குறைந்த அளவு ரசாயன உரம், இயற்கை உரம் கலந்த கலவையாக பயன்படுத்தலாம்.

காய்கறி விதைகள் விதைப்பதற்கு முன் டிரைகோடெர்மா விரிடி போன்ற உயிர் பாதுகாப்பு மருந்துகளை கலந்து விதை நேர்த்தி செய்வதால் நாற்றங்கால் நிலையில் ஏற்படும் நோய் தாக்குதலை தடுக்கலாம். பஞ்சகாவ்யா போன்ற திரவநிலை உரங்களை தெளிப்பதால் பயிர்களின் வளர்ச்சி மற்றும் பூ பூக்கும் தன்மை அதிகரிக்கும். வேப்பம் புண்ணாக்கு கரைசல், வேப்ப எண்ணை, வேப்பங்கொட்டை சாறு போன்ற வேம்பு சார்ந்த பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்தலாம். எனவே விவசாயிகள் ரசாயன உரம், மருந்துகளை தவிர்த்து இயற்கை வழி உரம் மற்றும் பயிர்பாதுகாப்பு முறைகளை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

## இலை வரும் முன்பு குழை தள்ளிய வாழை

தொண்டி, : தொண்டி அருகே புல்லூரில் இலை வரும் குழை தள்ளி வாழை மரத்தை மக்கள் ஆச்சர்யத்துடன் பார்த்து செல்கின்றனர். தொண்டி அருகேயுள்ள புல்லூர் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜீவா. ஆசிரியர்.

இவர் வாழைத்தோட்டம் வைத்துள்ளார். கடந்த வாரம் தோட்டத்தில் இருந்த ஒரு வாழை மரத்தை வெட்டினார். மீண்டும் துளிர்ந்து இலை வரும் என எதிர்பார்த்திருந்தார். ஆனால் மாறாக வாழை மரத்தில்குழை தள்ளியது. இலை வருவதற்கு முன்பே குழை தள்ளிய வாழை மரத்தை அப்பகுதிமக்கள்
ஆச்சரியத்துடன் பார்த்து செல்கின்றனர். இதுகுறித்து வேளாண்துறை அதிகாரிகளிடம் கேட்ட போது, ''வாழை மரம் போதிய வளர்ச்சி அடைந்து விட்டதால் தண்டிலிருந்து குழை தள்ளியிருக்கலாம்'' என்றனர்.

## அதிக விளைச்சலை தரக்கூடிய 'பிஒய்-8' நெல் ரகம் விரைவில் அறிமுகம்

புதுச்சேரி, : புதுச்சேரி குருமாம்பேட்டில் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையம் உள்ளது. இங்கு விவசாயம், கால்நடை, திசு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, காளாண் உற்பத்தி சார்ந்த ஆராய்ச்சிகளும், பயிற்சிகளும் அளிக்கப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக நெல், மணிலா ஆராய்ச்சி கூடமும் இயங்கி வருகிறது. அங்கு 7 வகையான நெல் ரகங்கள் இதுவரை கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. முதன் முதலில் கடந்த 1979ம் ஆண்டு பிஒய்-1 புதுவை பொன்னி என்ற நெல் ரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இதன் வயது 135 நாட்களாகும். இதனை பின் சம்பா, தாளடி ஆகிய பருவங்களில் பயிரிடலாம். ஒரு ஹெக்டேருக்கு 5500 கிலோ விளைச்சல்தரக்கூடியது.

இதற்கடுத்தபடியாக 1980ம் ஆண்டு அறிமுகப்படும் செய்யப்பட்ட பிஒய்-2 புனிதவதி என்ற நெல் ரகம் குறுவை, சொர்ணவாரி, நவரை பருவ பயிராகும். இதன் வயது 95 முதல் 100 நாட்களாகும். ஹெக்டேருக்கு 5 ஆயிரம் கிலோ வரை விளைச்சல் தருகிறது. 1984ம் ஆண்டு பிஒய்-3 பாரதிதாசன் என்ற ரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இது சொர்ணவாரி,

நவரை பருவத்தில் பயிரிடக்கூடியது. இதன் வயது 115 நாட்களாகும். ஹெக்டேர் ஒன்றுக்கு 5250 கிலோ விளைச்சலை தருகிறது. 1989ம் ஆண்டு பிஒய்-4 ஜவகர் என்ற நெல் ரகம் உருவாக்கப்பட்டு, அறிமுகம் செய்யப்பட்டது. சம்பா (ஆகஸ்ட் விதைப்பு) பருவ பயிரான இதன் வயது 145-150 வரை நாட்களாகும். ஹெக்ே டருக்கு 6250 கிலோ மகசூலை அள்ளித்தரக் கூடியது. பிஒய்-5 அரவிந்தர் என்ற நெல் ரகம் 1994ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. சொர்ணவாரி, நவரை, குறுவை பயிரிடலாம். இதன் வயது 90 முதல் 95 நாட்களாகும். ஒரு ஹெக்ே டருக்கு 6 ஆயிரம் கிலோ வரை விளைச்சல் தரும்.

2000ம் ஆண்டு பிஒய்-6 சுப்ரமணிய பாரதி என்ற ரகத்தை கண்டுபிடித்தனர். இது செப்டம்பர் மாதம் பயிரிடக்கூடிய சம்பா பருவ பயிராகும். இதன் வயது 135 நாட்களாகும். ஒரு ெஹக்டேருக்கு 5500 கிலோ வரை விளைச்சல் இருக்கும். கடைசியாக பிஒய்-7 அன்னலட்சுமி என்ற நெல் ரகம் 2007ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. இது பின் சம்பா, தாளடி பருவ பயிராகும். 125 நாட்கள் வரை வயதுடைய இந்த ரகத்தின் மூலம் ஹெக்டேருக்கு 5,500 கிலோ விளைச்சல் இருக்கும். இது நடுத்தர சன்ன வெள்ளை அரிசி, சாயாத தன்மை கொண்டது. திருந்திய நெல் சாகுபடிக்கு மிகவும் ஏற்புடையதாகும்.

துங்ரோ வைரஸ் நோய் எதிர்ப்புத்திறன், குலை நோய், பழுப்பு புள்ளி மற்றும் கதிர் உறை அழுகல் நோய் மிதமான எதிர்ப்பு திறன் கொண்டதாகும். இதேபோல் குருத்து பூச்சி, இலை சுருட்டு பூச்சி ஆகியவற்றை தாங்கி வளருகிறது. மேலும் அதிக புரதம் (9.04%), நடுத்தர அமிலோஸ் (20.4%), அதிக அரவைத்திறன் (71%) கொண்டாகவும் உள்ளது. இத்தகைய காரணங்களால் புதுச்சேரியை சேர்ந்த விவசாயிகள் பிஒய்-7 நெல் ரகத்தை பயிரிடுவதில் அதிக ஆர்வம்காட்டுகின்றனர்.

இந்நிலையில் 2007ம் ஆண்டுக்கு பிறகு ஒட்டு முறையில்(கிராஸ்பிரீடிங்) புதிய நெல் ரகத்தை உருவாக்கும் பணியில் நெல் ஆராய்ச்சியாளர் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். பல கட்ட சோதனைகளுக்கு பிறகு, தற்போது புதிய நெல் ரகத்தை உருவாக்கி உள்ளனர். கமிட்டியின் அனுமதி கிடைத்தவுடன் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று வேளாண் அறிவியல் நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விளைச்சல் அதிகரிப்பால் கோயம்பேடு சந்தையில் காய்கறிகள் விலை குறைந்தது**



சென்னை

விளைச்சல் அதிகரிப்பால் கோயம்பேடு சந்தையில் காய்கறிகள் விலை குறைந்து உள்ளன. ஒரு கிலோ கத்தரிக்காய் கிலோ ரூ.35–க்கும், வெண்டைக்காய் ரூ.50–க்கும், முருங்கைக்காய் ரூ.90–க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வரத்து–விளைச்சல் அதிகரிப்பு

கனமழை காரணமாக வரத்து பாதிக்கப்பட்டதால் சென்னை கோயம்பேடு காய்கறி சந்தையில் காய்கறிகள் விலை உயர்ந்து வந்தது. இயல்பு நிலை திரும்பியதை தொடர்ந்து காய்கறிகள் விலை குறைந்தது. இந்தநிலையில் பொங்கல் பண்டிகையையொட்டி காய்கறிகள் வரத்தினை அதிகப்படுத்த திட்டமிடப்பட்டது.

இதனால் கடந்த வாரத்தில் அதிகளவில் காய்கறிகள் அண்டை மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. என்றாலும் தேவை காரணமாக காய்கறிகள் விலையில் பெரிய மாற்றம் இல்லாமல் இருந்து வந்தது.

விளைச்சல்–வரத்து அதிகரித்துள்ளதால் காய்கறிகள் விலை தற்போது வெகுவாக குறைந்துள்ளது. வெண்டை, கத்தரி, முருங்கை உள்ளிட்ட காய்கறிகள் விலை அதிரடியாக குறைந்துள்ளன. இதுகுறித்து சென்னை கோயம்பேடு காய்கறி சங்கத்தின் பொதுச்செயலாளர் அப்துல் காதர் கூறியதாவது:–

காய்கறிகள் விலை குறைவு

அண்டை மாநிலங்களில் விளைச்சல் அதிகரித்து இருப்பதை தொடர்ந்து கூடுதல் லாரிகளில் காய்கறிகள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றது. இதனால் காய்கறிகள் விலை வெகுவாக குறைந்து உள்ளது. கடந்த வாரம் ரூ.70 வரை விற்பனையான ஒரு கிலோ வெண்டைக்காய் தற்போது விலை குறைந்து ரூ.50–க்கு விற்பனையாகிறது. அதேபோல, ரூ.70 வரை விற்பனையான கத்தரிக்காய் தற்போது ரூ.35 வரை விற்பனை

செய்யப்படுகிறது. ரூ.120 வரை விற்பனையான முருங்கைக்காய் விலை குறைந்து ரூ.90–க்கு விற்பனையாகிறது.

இதுதவிர தக்காளி, வெங்காயம், பீன்ஸ், இஞ்சி, கேரட், பச்சைப்பட்டாணி மற்றும் கிழங்கு வகைகளின் விலையும் ரூ.5 முதல் ரூ.15 வரை குறைந்திருக்கிறது.

விலை நிலவரம்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:–

பல்லாரி– ரூ.15 முதல் ரூ.20 வரை, உருளைக்கிழங்கு– ரூ.18, கேரட்– ரூ.55, பீன்ஸ்– ரூ.40, நூக்கல்– ரூ.35, சவ்சவ்– ரூ.25, பீட்ரூட்– ரூ.35, முட்டைக்கோஸ்– ரூ.18, மிளகாய்– ரூ.20, இஞ்சி– ரூ.50, சேப்பங்கிழங்கு– ரூ.35, கத்தரிக்காய்– ரூ.30 முதல் ரூ.35 வரை, வெண்டைக்காய்– ரூ.50, அவரைக்காய்– ரூ.30, கோவைக்காய்– ரூ.20, பாகற்காய்– ரூ.55 முதல் ரூ.60 வரை, முருங்கைக்காய்– ரூ.90, முள்ளங்கி– ரூ.16, வெள்ளரிக்காய்– ரூ.15, புடலங்காய்– ரூ.50, பூசணிக்காய்– ரூ.15, தக்காளி– ரூ.30, காலிபிளவர்– ரூ.25 முதல் ரூ.30 வரை, பீர்க்கங்காய்– ரூ.35, பச்சை மொச்சை– ரூ.30, சுரைக்காய்– ரூ.25, சாம்பார் வெங்காயம்– ரூ.30 முதல் ரூ.35 வரை, கீரை (கட்டு)– ரூ.10, தேங்காய்– ரூ.15 முதல் ரூ.22 வரை, வாழைக்காய்– ரூ.5, வாழைப்பூ– ரூ.10. இவ்வாறு அவர் கூறினார்.

**நதிகள் இணைப்பின் முன்னோடி திட்டமாக விளங்கும் காலிங்கராயன் வாய்க்கால் தினம் கொண்டாட்டம்**



ஈரோடு காலிங்கராயன் வாய்க்கால்.

ஈரோடு

நதிகள் இணைப்பின் முன்னோடி திட்டமாக விளங்கும் காலிங்கராயன் வாய்க்கால் தினம் நேற்று கொண்டாடப்பட்டது.

காலிங்கராயன் வாய்க்கால் தினம்

ஈரோடு மாவட்டத்தின் மிகப்பழமையான வாய்க்காலாக விளங்குவது காலிங்கராயன் வாய்க்கால். இன்றளவும் பல ஆயிரம் ஏக்கர் நிலத்துக்கு ஆண்டுக்கு 10½ மாதங்கள் பாசனம் வழங்கும் இந்த வாய்க்காலை வெட்டியவர் காலிங்கராயன். இவர் கி.பி.1270–ம் ஆண்டு அணை கட்டும் பணி மற்றும் வாய்க்கால் வெட்டும் பணியை தொடங்கினார். 12 ஆண்டுகள் முழுமையாக பணிகள் நடந்து கி.பி.1282–ம் ஆண்டு அணை திறக்கப்பட்டு பாசனத்துக்காக வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டது. அணை திறக்கப்பட்டு வாய்க்கால் மூலம் பாசனம் தொடங்கப்பட்ட தினம் தை மாதம் 5–ந் தேதியாகும். எனவே ஆண்டுதோறும் தை மாதம் 5–ந் தேதி காலிங்கராயன் வாய்க்கால் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி நேற்று காலிங்கராயன் அணைக்கட்டு பகுதியில் இருந்து கொடுமுடி அருகே உள்ள ஆவுடையார் பாறை வரை வாய்க்கால் பாய்ந்தோடி பாசனம் அளிக்கும் 56½ மைல் தூரத்தில் ஆங்காங்கே விவசாயிகள் காலிங்கராயன் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இதுபோல் வெள்ளோட்டில் உள்ள காலிங்கராயன் சிலைக்கு சமூக அமைப்பினர், விவசாயிகள் மாலை அணிவித்து மாலை அணிவித்தனர்.

<u>56½ மைல்</u>

கி.பி.13–ம் நூற்றாண்டில் பவானி ஆற்றை தடுத்து அணை கட்டி 56½ மைல் தூரம் வாய்க்கால் வெட்டி சாமை விளைந்த இடம் எல்லாம் சம்பா விளையச்செய்த காலிங்கராயன் புகழ் என்றும் நிலைத்து நிற்கிறது என்கிறார் காலிங்கராயன் வரலாற்றை வெளி உலகுக்கு கொண்டு வந்த கல்வெட்டு அறிஞர் புலவர் செ.ராசு.

பவானி ஆற்றில் பெருக்கெடுத்து ஓடி காவிரியில் கலந்து வீணாகும் வெள்ளத்தை அணைக்கட்டி தடுத்து பாசனம் கிடைக்காத சமவெளிப்பகுதிகளுக்கு தண்ணீர் கொடுத்ததுடன், வாய்க்கால் காவிரியில் சென்று கலக்கும் வகையில் வடிவமைத்தவர் காலிங்கராயன். தனது சொத்துகளை எல்லாம் அணை மற்றும் வாய்க்கால் பணிக்காக வாரி வழங்கியவர். ஒருபக்கம் மட்டுமே கரை அமைத்து 56½ மைல் தூரம் வெறும் மண்கரை அமைத்து இன்றும் வற்றாத நதிபோல வாய்க்கால் ஓடிக்கொண்டிருக்க செய்து உள்ளார்.

<u>வரலாற்று சின்னம்</u>

அணை நாசுவம்பாளையம், ராமநாதபுரம், பெரிய அக்ரகாரம், ஈரோடு, சாத்தனூர், சாவடிப்பாளையம், காளமங்கலம், பாசூர், பழனிக்கவுண்டம்பாளையம், வட்டக்கல்வலசு, மலையம்பாளையம், கொளாநல்லி, குட்டப்பாளையம், காரணாம்பாளையம், கருக்கம்பாளையம், ஊஞ்சலூர், கொளத்துப்பாளையம், பனப்பாளையம், கல்வெட்டுப்பாளையம், வெங்கம்பூர், வடக்குபுதுப்பாளையம், கணபதிபாளையம், கொடுமுடி, வருந்தியாபாளையம்,

சோளக்காளிபாளையம் ஆகியவை காலிங்கராயன் வாய்க்கால் கரையில் அமைந்துள்ள முக்கிய கிராமங்களாகும். வாய்க்காலை சுண்ணாம்பு ஓடை, பிச்சைக்காரன்பள்ளம் ஓடை, பெரும்பள்ளம் ஓடை, குரங்கன்பள்ளம் ஓடை என முக்கிய ஓடைகள் குறுக்கிடுகின்றன. இந்த ஓடைகளின் தண்ணீர் காலிங்கராயனில் சிறிதும் கலக்காமல் வாய்க்கால் வெட்டப்பட்டு உள்ளது சிறப்பாகும்.

காலிங்கராயன் வாய்க்கால் வெட்டி பாசனத்துக்கு திறக்கப்பட்டு நேற்றுடன் 734 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. இன்று பரவலாக பேசப்படும் நதிகள் இணைப்பு திட்டத்துக்கு 700 ஆண்டுகளுக்கு முன்பே முன்னோடியாக அமைந்த காலிங்கராயன் தினத்தை கொண்டாடுவதுடன், காலிங்கராயன் வாய்க்காலை வரலாற்று சின்னமாக அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஈரோடு மக்கள் வைத்து உள்ளனர்.

**மக்காச்சோளத்தின் தரத்தில் கவனம் தேவை ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்தல்**



நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- அடுத்த 3 நாட்கள் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று 5 மி.மீட்டரும், நாளை 1 மி.மீட்டரும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. நாளை மறுநாள் மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று மணிக்கு 4 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும்.

வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 89.6 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக இன்றும், நாளையும் 69.8 டிகிரியாகவும், நாளை மறுநாள் 68 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 70, 72, 73 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 45, 47, 49 சதவீதமாகவும் இருக்கும்.

அடுத்த 3 நாட்களுக்கான வானிலையில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடனும் ஒரிரு இடங்களில் மழைத்தூறலுக்கான வாய்ப்புடனும் காணப்படும். மேகமூட்டம் காரணமாக இரவு வெப்பம் உயர்ந்து காணப்படும். இதன் காரணமாக குளிர்காலத்தில் இயற்கையாக நிலவும் குறைந்த வெப்ப அளவுகளும், அதனை ஒட்டிய பனிப்பொழிவும் இருக்காது.

காற்றின் வேகம் சற்று அதிகரித்த அளவில் காணப்படும் என்பதால், கோழிகளுக்கு சாதகமான வானியே இருக்கும். முட்டை உற்பத்தி இயல்பான அளவில் காணப்படும். மக்காச்சோளம் வரவு குறைந்து உள்ளதால், கொள்முதல் செய்யும் போது அதன் தரத்தில் கவனம் தேவைப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## விவசாயிகளுக்கு பயிர் மேலாண்மை பயிற்சி



விராலிமலை வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை 2015-2016 திட்டத்தின் கீழ் தாளப்பட்டி ,கல்குடி வருவாய் கிராமத்தில் விவசாயிகளுக்கு நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி நடைபெற்றது. மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் நாகேந்திரன் தலைமை தாங்கினார். இப்பயற்சியில்¢ கதிர் உருவாகும் பருவத்தில் நெற்பயிரைத் தாக்கும் முக்கிய நோய் தாக்குதலான குலைநோய், பாக்டீரியா இலை கருகல் நோய் , பழ நோய்¢ மற்றும் துங்ரோ நோய் போன்றவற்றின் தாக்குதலின் அறிகுறிகள் மற்றும் ஒருங்கிணைந்த கட்டுபாட்டு முறைகள் குறித்து உண்மை மாதிரியுடன் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். வேளாண்மை அலுவலர் நடராஜன் நெற்பயிரில் இரண்டாம் மேல் உரமிடுதல் பற்றியும், முக்கியமான பருவத்தில் நீர் மேலாண்மை பற்றியும் மற்றும் பொதுவான இலைவழி உரமிடுதல் பற்றியும் பேசினார். குலை நோய் , இலை கருகல் நோய், பழ

நோய் மற்றும் துங்ரோ நோய்களுக்கான மருந்துகள் விவசாயிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டன. இதில்¢ உதவி வேளாண்மை அலுவலர்கள் கிருஷ்ணசாமி, சேகர், விவசாயிகள் மற்றும் பலர் முடிவில் வட்டார தொழில்நுட்ப மேலாளர் லெட்சுமிபரபா நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

## நுண்ணீர்ப்பாசனம் அமைக்க ரூ.8¾ கோடி மானியம் ஒதுக்கீடு கலெக்டர் மு.கருணாகரன் தகவல்



நெல்லை,

நெல்லை மாவட்டத்தில் நுண்ணீர்ப்பாசனம் அமைக்க ரூ.8¾ கோடி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இது குறித்து கலெக்டர் மு.கருணாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

<u>நீர் சிக்கனம்</u>

“நீரின்றி அமையாது உலகு’’ என்பது திருவள்ளுவரின் வாக்கு. உலகெங்கும் நாளுக்கு நாள் நீர்த்தேவை அதிகரித்து வரும் நிலையில் சிக்கனமாக நீரை பயன்படுத்தி வருங்கால தலைமுறைக்கு வளமான நீர்வளத்தை விட்டுச்செல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். மேலும் அபரிமிதமாக நீரை பயன்படுத்துவதை விட அளவாக நீரைப் பயன்படுத்தும்போதுதான் நிறைவான மகசூல் பெற முடிகிறது என்பது அறிவியல் பூர்வமாகவும், அனுபவ பூர்வமாகவும் உறுதிபடுத்தப்பட்டுள்ளது.

<u>மானியம்</u>

நீர் சிக்கனத்திற்கும், நிறைமகசூலுக்கும் ஒருசேர வழிவகுக்கும் சொட்டு நீர்ப்பாசன முறையை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு அவற்றை அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சத மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 சத மானியமும் வழங்குகிறது. இந்த ஆண்டிலும் அட்டவணை பிரிவை சேர்ந்த விவசாயிகளுக்கு 20 சத ஒதுக்கீடு வழங்கப்பட்டு முன்னுரிமை வழங்கப்படுகிறது. பெண்களுக்கும், முன்னாள் படை வீரர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது.

இந்த முறையில் நீரை சிக்கனமாக பயன்படுத்தலாம். பாசனத்துக்கு தனியே ஆள் விட தேவையில்லை. அதனால் பாசன ஆள் செலவு முற்றிலும் குறைகிறது. சத்துக்கள் நேரடியாக வேருக்கு கிடைக்கிறது.

<u>உரத்தை சேமிக்கலாம்</u>

ஒரு ஆய்வு முடிவின்படி தழைச்சத்தை நேரடியாக மண்ணில் இடும்போது, உரத்தில் 30 முதல் 50 சதம் வரை மட்டுமே கிடைக்கிறது. அதையே கரையும் உர பாசனமாக சொட்டு நீர் பாசனத்தின் மூலம் கொடுக்கும்போது 95 சத தழைச்சத்து பயிருக்கு கிடைக்கிறது.

அதேபோல் மண்ணில் நேரடியாக இடும்போது 50 சதம் மட்டுமே கிடைக்கும சாம்பல்சத்து கரையும் உரப்பாசனமாக சொட்டுநீர்ப்பாசனத்தின் மூலம் கொடுக்கும்போது 80 சதம் கிடைக்கிறது.

இதனால் உரத்தை சேமிக்கலாம். நுண்ணூட்டச் சத்துக்களையும் திறம்பட அளிக்க முடியும்.

வேரை நீர் நேரடியாக சென்றடைவதால் இடையே களைகள் முளைப்பது குறைகிறது. களையெடுக்கும் செலவும் குறைகிறது.

ரூ.8¾ கோடி மானியம்

நெல்லை மாவட்டத்தில் தோட்டக்கலை பயிர்களில் 952.12 எக்டேரில் நுண்ணீர்ப்பாசனம் அமைக்கவும், வேளாண்மை பயிர்களில் 315.25 எக்டேரில் நுண்ணீர்ப்பாசனம் அமைக்கவும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கான மானியத்தொகை ரூ.8 கோடியே 72 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே வாழை, காய்கறிகள், மிளகாய், மல ப்பயிர்கள், பழமரப்பயிர்கள் போன்ற தோட்டக்கலை பயிர்கள் மற்றும் தென்னை, கரும்பு, துவரை, பருத்தி போன்ற வேளாண்மை பயிர்களை சாகுபடி செய்யும் நெல்லை மாவட்ட சிறு, குறு மற்றும் இதர விவசாயிகள், ஆதிதிராவிட விவசாயிகள் தங்கள் வட்டார தோட்டக்கலை மற்றும் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகங்களை அணுகி பயன் பெறலாம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## திருப்பூரில் பசுமை நுகர்வோர் காய்கறி கடையில் கலெக்டர் ஆய்வு



திருப்பூர் மாவட்டத்தில் திருப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் புஷ்பா தியேட்டர் பஸ் நிறுத்தம் அருகில் பண்ணை பசுமை நுகர்வோர் கூட்டுறவு காய்கறி கடையை சென்னை தலைமை செயலகத்தில் இருந்து காணொலி காட்சி மூலம் முதல்–அமைச்சர் ஜெயலலிதா திறந்து வைத்தார். இந்த கூட்டுறவு காய்கறி கடையை மாவட்ட கலெக்டர் ஜி.கோவிந்தராஜ் பார்வையிட்டார். தொடர்ந்து போயம்பாளையம் பிரிவில் திறந்து வைக்கப்பட்டுள்ள கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அனுப்பர்பாளையம் கிளை, ராக்கியாபாளையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ள நல்லூர் கிளையையும் கலெக்டர் பார்வையிட்டார். அங்கு புதிதாக கணக்கு தொடங்கிய வாடிக்கையாளர்களுக்கு கணக்கு புத்தகத்தையும், நிரந்தர வைப்புநிதி செலுத்திய வாடிக்கையாளர்களுக்கு சான்று பத்திரங்களையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் கோவை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் சக்திவேல், மேலாண்மை இயக்குனர் லோகநாதன், பொதுமேலாளர் கலைவாணன், உதவி பொது மேலாளர் பழனிமணி, தலைமை நிர்வாக அதிகாரி அஜித்குமார், திருப்பூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் சுபாஷ், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் குமார், திருப்பூர் மாநகராட்சி மண்டல தலைவர் ஜான் உள்பட பலர் கலந்து கொண்டனர்.